**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.255/2015**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 27.01.2021**

**பெயர் - ஆரோக்கிய ராஜ்**

**த/பெ - பீட்டர்**

**வயது -**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -12.27pm**

**முதல் விசாரணை -**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமாணபத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். வீராசாமி பெருமாள் மற்றும் சுப்பிரமணி பெயரிலான சிட்டா மற்றும் அடங்கல் கணக்கு வாசா ஆ 1 ஆகவும், 01.02.1967 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 2 ஆகவும், 07.08.2015 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் வாசா ஆ 3 ஆகவும், 07.08.2015 தேதியிட்ட ராஜாபாயின் இறப்பு சான்றிதழின் சான்றிட்ட நகல் வாசா ஆ 4 ஆகவும், ரமனா ரெட்டிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 5 ஆகவும். 21.09.1990 தேதியிட்ட ரமனா ரெட்டிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 6 ஆகவும். 07.11.1990 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 7 ஆகவும், வாசா ஆ 5, 6, மற்றும் 7 உண்மை தன்மை, செல்லும் தன்மை மற்றும் நிறைவேற்றும் தன்மை குறித்து ஆட்சேபனையுடன் குறியீடு

செய்யப்படுகிறது. கணினி பட்டா எண் 749 வாசா ஆ 8 ஆகவும், 6.01.2010 தேதியிட்ட பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 9 ஆகவும், 11.10.2010 தேதியிட்ட பொது அதிகார பத்திரத்தின் நகல் வாசா ஆ 10 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. 20.07.2015 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வாசா ஆ 11 ஆகவும், 17.08.2015 தேதியிட்ட கிஸ்து ரசீது வாசா ஆ 12 ஆகவும். வழக்கு சொத்திற்கான புல வரைபடம் வாசா ஆ 13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**விசாரணை முடியும் நேரம் -12.39pm**